International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 1 Jan - Mar 2026

Published on 14, Jan - Mar 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# சிலப்பதிகார மதுரைக் காண்டத்தில் இளங்கோவின் காப்பிய நோக்கமும் பாத்திரப் படைப்புகளும்

**நாகேஸ்வரி ஸ்ரீகுமரகுரு**
முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் (கனடா)
**முனைவர் ச. செந்தில்குமார்**
பேராசிரியர், நெறியாளர்
தமிழியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் சிதம்பரம் - இந்தியா

**ஆய்வுச்சுருக்கம்**

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த தமிழ் நிலக்காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகமான இக்காப்பியத்தில் மூன்று காண்டங்களின் ஒன்றான மதுரைக்காண்டத்தில் காப்பிய ஆசிரியர் இளங்கோ அடிகளால் படைக்கப்பட்ட காப்பியப் பாத்திரங்களும் அப்பாத்திரங்கள் படைக்கப்பட்டதன் நோக்கமும் பற்றிய கட்டுரையாக இக் கட்டுரை அமைகிறது.

**முகவுரை**

*“யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவனைப் போல், இளங்கோவனைப் போல் பூமிதனில் யாங்கணுமே கண்டதில்லை”* என்று பாரதியாரால் புகழப் பெற்ற முப்பெரும் புலவர்களுள் ஒருவரே இளங்கோ ஆவார். இவரால் இயற்றப்பட்டதே ஐம்பெரும்காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரமாகும். தமிழ் நிலக்காப்பியங்களுள் தலை சிறந்ததும், மிகத் தொன்மையானதும் காலத்தால் முந்தியதுமான செந்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம். இவ்வரிய காப்பியம் தமிழக முப்பெரும் வேந்தர்களுக்கே உரியதாகவும் சேர, சோழ, பாண்டிய எனும் முப்பெரும் நாட்டினை இணைக்கும் இணைப்புப் பாலமாகவும் கொண்டுள்ளது.

ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரம் காப்பிய வரையறையிலிருந்து சிறிதும் மாறுபடாது சமுதாயம் செம்மையுற அமைவதற்கு தமிழர் தம் பண்பாடு, சமய நெறிகள், பழக்க வழக்கங்கள், கலைகள் என்பவற்றை அறிந்து கொள்ள இக்காப்பியம் பெரிதும் துணை நிற்கிறது. சிலப்பதிகார காலத்து தமிழகத்தின் நிலப்பாடுகள், அந்நிலவாழ மக்களின் இயல்புகள், அவர்கள் ஈடுபட்டு மகிழ்ந்து இன்புற்ற இசை, கூத்து முதலாய கலைகள் யாழ், தண்ணுமை முதலிய இசைக்கருவிகளை இயக்கிய இசையாளர் அவர் தம் முறைகள், நம்பிக்கைகள் முதலியவற்றை இயம்பும் தமிழ்ச் சமுதாய வரலாறு கூறும் நூலாகப் பார்க்கப்படுகிறது. ஆதலால் இதனை தமிழில் இயற்றப்பட்ட முதல் கலைக்களஞ்சியமாகவும் பார்க்கப்படுகிறது.

தனித்தமிழ்ப் பாடல்களாகப் போற்றப்பட்டு வந்த தமிழகத்தில் முதன் முதலில் நெடுங்கதைப் பாடல் வடிவில் உருவாக்கப்பட்ட முத்தமிழ்க் காப்பியம் சிலப்பதிகாரம் ஆகும். இக்காப்பியத்தின் ஆசிரியர் இக்கதையினை மேலும் சிறப்பிக்கும் வகையில் 16 கிளைக்கதைகளை உள்வாங்கி காப்பியத்தினை மேலும் மெருகூட்டியிருப்பதனைக் காணலாம். அத்துடன் முத்தமிழ்க் காப்பியம், குடிமக்கள் காப்பியம், மூவேந்தர் காப்பியம், முதன்மைக் காப்பியம், பத்தினிக் காப்பியம் எனப் பல முகங்களைக் கொண்டும் 1. **அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும். 2. உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர். 3. ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்.** எனும் மூன்று தத்துவங்களைக் கருப்பொருளாக் கொண்டு படைக்கப்பட்டுள்ள சிறப்புக் கொண்ட காப்பியமாக காணலாம்.

**காப்பியத்தின் வரைவிலக்கம்**

சிலப்பதிகாரம் பெருங்காப்பிய இலக்கண வரம்பிற்கு உட்பட்ட முதல்த் தமிழக் காப்பியமாகும். காப்பிய இலக்கணப்படி பெருங்காப்பியம் தன்னிகரில்லாத் தலைவனைக் கொண்டிருத்தல்

வேண்டும். ஆனால் சிலம்பில் தன்னிகரில்லாத் தலைவியாக கண்ணகி போற்றப்படுவதோடு புகார்க் காண்டம், மதுரைக் காண்டம், வஞ்சிக்காண்டம் என மூன்று காண்டங்களாகப் பகுத்து 30 காதைகளைக் கொண்டு, உரையிடையிட்ட பாட்டிடைச் செய்யுள் வடிவில், தனித் தமிழ்ப் பாடல்களாகப் போற்றப்பட்டு வந்த தமிழகத்தில் முதன் முதலில் உருப்பெற்ற நெடுங்கதைப் பாடல் வடிவில் உருவாக்கப்பட்ட காப்பியமாக சிலப்பதிகாரம் பார்க்கப்படுகிறது.

**பெயர்க் காரணம்**

யார் சிலம்பால் விளைந்தது சிலப்பதிகாரம்? கண்ணகியிதா? அல்லது பாண்டிமா தேவியினதா? பாண்டிமா தேவியின் சிலம்பு அரண்மனைப் பொற்கொல்லனால் திருடப்படாது விட்டிருந்தால் கோவலன் கொலை நடந்திர வாய்ப்பில்லை. எனவே பாண்டிமா தேவியின் சிலம்பே இக்காப்பிய பெயருக்கு காரணம் என்பது பேராசிரியர் வ.சு.ப. மாணிக்கனார் கருத்தாகும். ஆனால் கண்ணகி சிலம்பே இக்காப்பிய பெயரில் உள்ளது என்பது பொதுவான கருத்து. காரணம் கண்ணகி காப்பியத்தின் தலைவி. கண்ணகி கோவலனிடம் தன் ஒற்றைச் சிலம்பை கொடுத்திரா விட்டால் இக்காப்பியம் மதுரைவரை நீண்டு காப்பிய நீடிப்பு பெற்றிருக்க முடியாது என்பது பலரது பார்வையாகப் பார்கப்படுகிறது. எனவே கண்ணகியின் சிலம்பால் ஏற்பட்டதே பெயருக்கு காரணமாகி நிற்கிறது.

**ஆசிரியர்**

> குணவாயில் கோட்டத்து அரசு துறந்து இருந்த
> குடக் கோச் சேரல் இளங்கோ அடிகட்கு

குணவாயில் கோயிலில் இளவரச பட்டத்தை துறந்த இளங்கோவடிகள் வரந்தரு காதையில் தன் அண்ணன் செங்குட்டுவன் கண்ணகிக்கு எடுத்த திருக்கோயில் விழா நிகழ்ச்சிகளை நேரில் சென்று பார்த்த பின் இக்காப்பியம் எழுதினார். இக்காப்பியத்தின் மூலம் கண்ணகி யின் கற்பொழுக்கமும், பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனின் நேர்மையும், அரசியல் நடுநிலைமையையும் அடிகளாரை மிகவும் கவர மூவேந்தர்களுக்கும் உரிய தமிழின் உயர் காவியமான சிலப்பதிகாரத்தைக் கவி புனைந்தார்.

**சிலப்பதிகாரக் காலம்**

ஐம்பெரும் காப்பியங்களுள் முதல் பெருங் காப்பியமாகப் போற்றப்படும் சிலப்பதிகாரம் 2ஆம் நூற்றாண்டில் எழுந்ததாகப் பார்க்கப் படுகிறது. அதாவது சங்க காலத்திற்கும் தேவாரகாலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் எழுந்ததாகும். சேரன் செங்குட்டுவன் சங்க இலக்கியங்களில் ஒன்றான பதிற்றுப்பத்து எனும் நூலில் ஐந்தாம்பத்தின் தலைவனாக வைத்து பரணர் எனும் புலவரால் பாடப்பட்டுள்ளான். எனவே சேரன் செங்குட்டுவன் காலம் 2ம் நூற்றாண்டு சேரன் செங்குட்டுவனின் தம்பி இளங்கோ என்பதனாலும் சிலப்பதிகாரம் இயற்றப்பட்ட காலப்பகுதி 2ஆம் நூற்றாண்டு என்பது அறியப்படுகிறது.

**காப்பிய நோக்கம்**

காப்பியத்தில் அறம், பொருள், இன்பம் மூன்றும் இடம்பெற்றுள்ளது. கோவலனும், கண்ணகியும் வானுலகு செல்வதும் காட்டப்படும் அதே நேரம் காப்பியத்தில் இளங்கோவடிகளின் முக்கிய நோக்கம் அறத்தின் வலிமையைக் காட்டுவது. தம்மை அறவுணர்வு உந்த, தாமும் மக்களிடம் அறவுணர்வை விழிப்புறச் செய்ய வேண்டும் எனும் உயர்ந்த நோக்கத்தினைச் சிலப்பதிகாரம் எனும் காப்பியத்தின் மூலம் அடிகளார் அமைத்து தனது காப்பிய நோக்கத்தின நிறைவு செய்துள்ளார்.

**சிலப்பதிகாரக் காதைகள்**

சிலப்பதிகாரத்தின் முப்பெரும் காண்டங்களில் ஒன்றான மதுரைக் காண்டம் காடு காண் காதை, வேட்டுவ வரி, புறஞ்சேரி இறுத்த காதை, ஊர் காண்காதை, அடைக்கலக்காதை, கொலைக் களக்காதை, ஆச்சியர் குரவை, துன்பமாலை, ஊழ் சூழ் வரி, வழக்குரைகாதை, வஞ்சின மாலை, அழற்படுகாதை, கட்டுரை காதை எனப் பதின்மூன்று காதைகளைக் கொண்டு காணப் படுகிறது.

**காடு காண் காதை**

கோவலன், கண்ணகி, சமணத் துறவியான கவுந்தியடிகள் மூவரும் மதுரை நோக்கிச் செல்கின்றனர். அவ்வாறு செல்கையில் மாங்காட்டு மாமுது மறையோனைச் சந்தித்தனர். மாங்காட்டு மறையோன் மூலம் மதுரை செல்லும் வழிகளையும் கேட்டு அறிந்தனர். இங்கே அடிகளார் வழி சொல்லும் போது மறையோன் மூலம் திருமாலின் கிடந்த நின்ற திருக்கோலத்தைக் கூறுவதன் மூலம் திருமால் வழிபாட்டையும், மயக்கும் தெய்வமான வன சாரணியரும் விழிநுதற் குமரியான "ஐ" யையின் கோட்டமும், கொற்றவை வழிபாடு பற்றியும் கூறுகின்றார். பழந்தமிழர் வாழ்வியலில் தெய்வ நம்பிக்கை முதலிடம் பெற்றுள்ளதோடு சிவ வணக்கம், திருமால் வணக்கம், ஐயை வணக்கம், அருக இவளோ செங்கைச் செல்விநிற்கின்றார். இற்றைக்கு ஏறக்குறைய இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இளங்கோவடிகள் சமய ஒற்றுமையினைத் தன் காப்பியத்தின் வாயிலாக உணர்த்தி நிற்பது காப்பியத்தின் சிறப்பான பண்பாகக் காணப் படுகிறது. அது மட்டுமல்ல அடிகளார் இக்காப்பியத்தின் மூலம் சமயக் காழ்ப் புணர்ச்சியினைக் களைந்து அனைத்து மதங்களை யும் அரவணைத்து நிற்பதனைக் காணலாம்.

**வேட்டுவ வரி**

**"ஐ"** கோட்டத்தில் கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மூவரும் இளைப்பாறும் நேரத்தில் சாலினி எனும் பெண், தெய்வ உருவேற்று கண்ணகி வாழ்வின் பின் நிகழ்வுகளை

வேட்டுவரிப் பாடல்கள், கூத்துகள் மூலம் கூறுகிறாள். தெய்வமுற்ற சாலினி மூலம் வேடுவர்களின் இறைவழிபாட்டைக் காட்டியதோடு எயினர்களின் வேண்டுதல்களையும் சாலினி மூலம் நினைவுபடுத்துவது குறிப்பிடத்தக்கது. கண்ணகி தெய்வ நிலை அடையப்போவதனை முன்னதாக அறிந்த சாலினி தெய்வ ஆவேசமுற்று கண்ணகியை நோக்கி "இவளோ செங்கைச் செல்வி குடமலையாட்டி தென்தமிழ்ப் பாவை செய்த தவக் கொழுந்து ஒரு மாமணியால் உலகிற்கு ஓங்கிய திருமாமணி" (47 -50)எனப் போற்றுகின்றாள். இவ்வேட்டுவ அடிகள் மூலம் பழந்தமிழரின் கொற்றவை வழிபாடு சாலினி எனும் பெண் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளதனைக் காணலாம்.

**புறஞ்சேரி இறுத்த காதை**

கோவலன், கண்ணகி, கவுந்தியடிகள் மதுரை நோக்கிய பயணத்தில் பகல் நேர வெய்யில் கொடுமையினால் இரவு நேரத்தில் நிலவு வெளிச்சத்தில் அவர்கள் வழி நடந்தனர். ஓரிடத்தில் கௌசிகன் மாதவியின் ஓலையை கொண்டு வந்ததன் மூலம் கோவலன் மாதவி எந்தவித குற்றமற்றவள் என்பதனை உணர்கி றான். கோவலன் அங்குள்ள பாணர் களிடம் மதுரையை அடையும் தூரத்தினைக் கேட்டறிந்து கொண்டு வைகையாற்றை மரத்தெப்பத்தாற் கடந்து செல்லும் போது கண்ணகிக்கு நடக்கப் போகும் துன்பத்தினை முன் கூட்டியே வைகையாறு அறிந்து கொள்கிறது. பகைவரைப் போரில் வென்ற வெற்றிக் கொடியானது "நீவீர் இவ்வூருக்குள் வாராதீர்" என்பது போல கொடிகள் பறந்து கொண்டிருந்தன. இது பின் நிகழ்வை முன்னுனர்த்தும் முன் குறிப்பு உத்தியாகக் கையாளப் பட்டிருப்பதனைக் காணலாம். காப்பியத்தினை மேலும் சிறப்பிக்கும் வகையில் அணிகளில் ஒன்றான தற்குறிப்பேற்ற அணி பயன்படுத்திய தன்மையும் காணக் கூடியதாக உள்ளது.

**ஊர் காண் காதை**

கோவலன் கவுந்தியடிகளை வணங்கித் தன் நெறி தவறிய வாழ்க்கையை எடுத்துக் கூறும் போது கவுந்தியடிகள் அறத்தின் வலிமையையும், விதி வலியது என்பதனையும் எடுத்துக் கூறுகின்றார். அறம் அறிந்த அறிஞர்கள் பலமுறை எடுத்துச் சொன்னாலும் இந்த மாநிலத்தில் மாந்தர்கள் அதன்படி நடப்பதில்லை. அது இந்த உலகத்து இயற்கை. தீமை பயக்கும் ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் போது உறுதி குலைந்து தளர்ச்சி ஏற்படுகின்றது. ஆனால் கற்றவர்கள் கலங்கு வதில்லை. அவை வினைப்பயன் என அறிவார்கள். துறவிகளுக்கு துயர் என்பது இல்லை. மாதரைக் காதலித்து அதனால் துயர் அடைவார்கள் பலர். இது மனித வரலாறு. இதை நாம் வரலாறுகள் மூலம் அறிந்துள்ளோம். தெய்வங்கள் கூட இதற்கு விதிவிலக்கல்ல. சிலப்பதிகாரத்தில் மட்டுமன்றி கம்பராமாயணம், நளன் தமயந்தி போன்ற இலக்கியங்களிலும் விதி வலியது என்பது பேசப்பட்டுள்ளது. எனவே உன் வாழ்க்கை சீர்மை கொண்டது. "நீ ஏதும் கொள்வது வீண்" என்று சான்றுகள் காட்டி கவுந்தியடிகள் வாயிலாக அறம் வலியது என்பதனை கோவலன் என்ற பாத்திரப் படைப்பின் மூலம் மெய்பித்துக் காட்டியுள்ளார்.

**அடைக்கலக் காதை**

மறையோதும் மாடலன் மூலம் கோவலன் வாழ்வில் நடந்த மூன்று முக்கிய நிகழ்வுகளான 1. மடக்களிறு அடக்கிய கருணை மறவனையும் 2. ஒல்காச் செல்வத்து உறுபொருள் கொடுத்து நல்வழிப்படுத்திய செல்வத்திச் செல்வனாகவும் 3. படித்துரை கூறிய பாதகனுக்கும் இரங்கி அவ்விளைஞனின் பசிப்பிணி அறுத்து பல்லாண்டு புரந்த இல்லோர் செம்மலாகவும் காப்பியத்தின் ஊடாகக் கூறும் போது கோவலனின் உயர்சிறப்பினைக் காணக் கூடியதாக உள்ளது. மறுபுறம் கவுந்தியடிகள் கண்ணகியை மாதிரியிடம் அடைக்கலமாகக் கொடுப்பதன் மூலம் அடைக்கலத்தின் பெருமை யும், சிறப்பும் அதனால் உண்டாகும் பேற்றினையும் விளக்கிச் சென்றுள்ளார். அதுமட்டுமன்ற கண்ணகியின் கற்பின் மேன்மை யையும், குடும்பச் செல்வ நிலையினையும் கவுந்தியடிகள் மூலம் மாதிரிக்கு எடுத்துரைப் பதனைக் காணலாம். அடைக்கல காதை மூலம் கண்ணகியின் கற்பம், அவளது தெய்வ நிலையும் கவுந்தியடிகள் மூலம் காப்பிய ஆசிரியர் எமக்குச் சொல்வதன் மூலம் சிலப்பதிகாரத்தின் "உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏற்றுவர்" என்ற காப்பிய ஆசிரியரின் கருப்பொளினை எமக்கு நினைவூட்டி நிற்கிறது சிலப்பதிகாரம்.

**கொலைக்களக் காதை**

கோவலன் கண்ணகிக்கு ஒரு புது மனையிலே இடந்தந்து பல்வகைப் பொருளும் தருகிறாள் மாதிரி. கண்ணகி தன் கைத்திறன் அமையக் கணவனுக்கு உணவு சமைத்து பரிமாறுகிறாள். தமிழர்களின் மிகச்சிறந்த தொன்மை வாய்ந்த விருந்தோம்பல் பண்பினையும் ஆசிரியர் சுட்டிக் காட்ட மறக்கவில்லை. தொடர்ந்து கோவலன் தான் நெறி தவறிச் சென்று தனது வாழ்க்கையை பாழ்படத்தியதனை கண்ணகியிடம் கூறும் போது இதுவரை எதிர்த்துப் போசாத கண்ணகி முதல் முறையாக "நீர் போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று தக்க இடத்தில் இடித்துரைக்கின்றாள். போற்றா ஒழுக்கம் புரிந்தமையால் இல்வாழ்க்கை யின் மையக்கூறான அறம்செய்தல், அறவோரை எதிர் கொள் முடியாமல் போதல், விருந்தினரை உபசரிக்க முடியாது போதல் போன்ற அறச் செயல்களை செய்ய முடியாதமையை எண்ணி வருந்தினாள். அறச் செயல் ஒரு மனித வாழ்வில் எவ்வளவு முக்கிய இடம் பெறுகிறது என்பதனை மிக அழகாகக் கண்ணகி எனும் பாத்திரத்தின் ஊடாக எடுத்தியம்பும் பண்பு

போற்றத்தக்கது. கடை வீதியில் கோவலனைக் பொற்கொல்லன் சந்திக்கிறான். இக்காப்பியத்தில் பொற்கொல்லன் காப்பிய நடைக்கு இன்றியமையாத ஒர எதிர்க் கதாநாயகனாகப் படைக்கப்பட்டுள்ளான். பொற்கொல்லன் தான் களவாடிய பொற்சிலம்பின் களவையும், பழியையும் கோவலன் மீது சுமத்துகிறான். கனி மொழியால் பேசிகோவலனையும், காவலனையும் தன் வயப்படுத்தலும், களவு நூற் செய்திகளை யெல்லாம் சொல்லி ஊர்காப்பாளரை தன்வயப் படுத்தலும் இவன் தன் சுழ்ச்சித் திறத்திற்கு ஏற்ற சான்றுகளாகும். இங்கே இளங்கோ அடிகள் பொற்கொல்லன் எனும் பாத்திரத்தின் மூலம் களவு, சுழ்ச்சி என்பன வினையிலேயே முடியும் எனக் காட்டுகிறார்.

கோவலன் ஏன் கொலை செய்யப்பட்டான்? அறநெறி தவறாத பாண்டியன் ஏன் கோவலன் இறக்கக் காரணமானான்? இங்கேதான கோவலனின் ஊழ்வினை வந்து விளையாடுகின்றது.

**மண்ணக மடந்தை வான்துயர் கூறக்**

**காவலன் செங்கோல் வளைஇய வீழ்ந்தனன்**

**கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து - என்**

**நண்ணும் இருவினையும் நண்ணுமின்கள் நல்லறமே**

**வளையாக செங்கோல் வளைந்ததே- பண்டை**

**விளைவாகி வந்த வினை** (215-221)

இங்கே பாண்டிய மன்னனின் செங்கோலும் ஊழ்வினை காரணமாக வளைந்தது. கோவலனின் அவல முடிவு உலகிற்கோர் படிப்பினையாகவும் அமைந்து நிற்கிறது. அவன் பழம் பிறப்பில் செய்த தீவினை இப்பிறப்பில் அவன் வாழ்வினைப் பறித்துக் கொண்டது. அது மட்டுமல்ல வளையாத செங்கோலும் வளைந்தது அதற்கும் பாண்டியனின் பழவினையே காரணமாகின்றது. இங்கே “ஊழ்வினை உறுத்து வந்து தன்பயனை ஊட்டும்” என்பது தெளிவாகக் கூறப்பட்டதனைக் காணலாம்.

**ஆச்சியர் குரவை**

ஆச்சியர் குரவை என்பது ஆச்சியர் பெண்கள் கூடி ஆடிய குரவைக்கூத்து எனப் பொருள்படும். ஆயர் சேரியிலே பல தீய நிமித்தங்கள் தோன்றவும் அதனால் தீமை நேரும் என்று அஞ்சிய ஆயர் மகளீர்கள் தம் குல தெய்வமான கண்ணனை வேண்டி ஏழு ஆயர் மகளீர் சேர்ந்து குரவைக் கூத்து ஆடினர். இவ் எழுவருக்கும் குரல், தத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் எனும் ஏழு பண்களின் பெயர் கொண்டு அழைக்கப்பட்டனர். இவ்வாறு ஆயர்மகளீரையும் கொண்டு ஏழு பாத்திரங்களாகக் வைத்து அவர்கள் மூலம் குரவை ஆடி தங்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றுமாற ஆடிச் சாந்தி செய்விக்கும் மரபை நம்பிக்கையை அக்கால மக்கள் கொண்டிருந்தனர் என்பதனை அறியக் கூடியதாக உள்ளது. கோவலன் கொலையுண்ட துயரமான செய்தியை உடனே கண்ணகியிடம் கூறாமல் ஆச்சியர் குரவைப் பாடலைக் கூறிப் பின் அடுத்து வரும் காதையில் கூறுவதன் மூலம் ஆசிரியரின் காதை வைப்பு முறையின் சிறப்பினைக் காணலாம்.

**துன்பமாலை**

துன்பமாலை எனும் காதையில் துயரச் செய்தியால் கண்ணகி அடைந்த துன்பங்கள் கூறப்படுகிறது. குரவையாடுதல் முடிந்ததும் வைகையாற்றில் நீராடச் சென்றனர். மதுரை நகரில் பெரிய ஆரவாரம் கேட்டது. நெடுநேரமாகி யும் தன் கணவர் வரவில்லையே என்று கண்ணகி புலம்பியபடியே இருந்தாள். அப்போது மதுரை நகரில் இருந்து வந்த ஒரு பெண் கோவலன் அரண்மனைச் சிலம்பைத் திருடினான் என்பதற்காக கொலை செய்யப்பட்டான் என்றாள். அது கேட்ட கண்ணகி பதறித்துடித்தாள். புகார் நகரில் தான் கண்ட கனவு பலித்து விட்டதே என்பதனை நினைந்து நெடுங்கண்ணீர் விட்டாள். இத்துன்பமாலை மூலம் கண்ணகியின் அச்சம், கையறுநிலை, புலம்பல், நாவன்மை போன்ற பல்வேறு பாத்திரப் படைப்புகளைக் கொண்ட ஓர் உணர்வுக் கலவையாக காப்பிய நிகழ்வுகளை எடுத்தியம்புகிறார்.

**ஊழ் சூழ்வரி**

கண்ணகி தன்னிடம் இருந்த மற்றொரு சிலம்பினைத் தன் கையிலே எடுத்துக் கொண்டவளாகத் தன் கணவனின் உடலினைக் காணப் புறப்பட்டாள். குலமகளான கண்ணகி பொறுமையின் வடிவமாகத் துயரங்களைத் தாங்கி அமைதியோடு இருந்தவள் கொதித்தும் பலரும் அஞ்சி ஒதுங்கி வம்பப் பெருந் தெய்வம் போல ஆவேசித்து மன்னன் அரண்மனை நோக்கி நீதி கேட்கப் போகும் நிலமையும் பார்கும் போது இந்நிலை மாற்றம் பெண்மையின் தெய்வீகப் பேரியல்பு என்றும் உணர்த்துகிறது இக்காப்பியம்.

**வழக்குரை காதை**

சிலப்பதிகாரத்தின் காதைகளுள் முதன்மையான காதையாகப் பார்க்கப்படுவது வழக்குரை காதையாகும். கண்ணகி தன் கணவன் கள்வன் அல்லன் என்பதனை மன்னனுக்கும், உலகிற்கும் உணர்த்த எண்ணினாள். வைகறையில் தீய கனவு கண்ட அரசி கோப்பெருந்தேவி அவைக் களத்தில் அரியணையில் அமர்ந்தபடி மன்னிடம் கூறுகிறாள். அப்போது மாறாத கோபத்துடன் கண்ணகி தன் கையில் ஓர் சிலம்பை ஏந்தியபடி கண்ணீரோடு வாயிலில் வந்து நின்று தன் வரவை உடனே மன்னனுக்கு தெரிவிக்குமாறு வாயிற் காப்போனிடம் கூறுகிறாள். அவனுக்கு அவள்,

**அடத்தெழு குரதி அடங்காப் பசுந்துணிப்**

**பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி**

**வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை, அல்லள்**

**அறுவர்க்கு இளைய நங்கை இறைவனை**

**ஆடல் கண்டருளிய அணங்கு சுர் உடைக்**

**கானகம் உகந்த காளி தாருகன்**
**பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்** (33-39)

என்று கண்ணகியின் பத்திரகாளித் தோற்றத்தை வர்ணிக்கிறான் வாயிற் காவலன். கண்ணகி மன்னன் முன் சென்று

**தேரா மன்னா செப்புவது உடையேன்**
**எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்ப**
**புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றயும்**
**வாயிற் கடைமணி உகுநீர் நெஞ்ச கடத்தான் தன்**
**இரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்**
**பெரும் பெயர்ப் புகார் என் பதியே அவ்வூர்**
**ஏசாச் சிறப்பின் இசை விளங்கு பெருங்குடி**
**மாசாத்து வணிகன் மகன் ஆகி**
**வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்**
**சுழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்கு**
**என்கால் சிலம்பு பகர்தல் வேண்டி**
**நின்பால் கொலைகளப் பட்ட கோவலன் மனைவி**

என்று கூறினாள் கண்ணகி.

**வஞ்சின மாலை**

பாண்டியன் அக்கணத்திலேயே உயிர் விட்ட காட்சி கண்ணகியைத் திகைப்படைய செய்தது. கோப்பெருந் தேவியின் கற்பும் அவளை பெரிதும் வியப்படையச் செய்கிறது. தானும் கற்புடைய பல மகளீர் பிறந்தவள் என்றும் பத்தினியே என்றும் அரசோடு மட்டும் அமையாது மதுரை நகரினையும் அழிப்பேனென்றும் வஞ்சினம் கூறிச் சென்று தீக்கடவுளை மதுரை மீது ஏவுகிறாள்.

**அழற்படு காதை**

தீத் தெய்வத்தினை கண்ணகி மதுரை மீது ஏவியதன் பயனாக மதுரையை தீ பற்றிக் கொண்டது. நால்வகை வருணபூதங்களும் நகரைவிட்ட விலகிப்போயின. கணவனை இழந்த துயரத்தின் காரணமாகச் சொல்ல முடியாத துயரத்தோடு கண்ணகி தன் கால்போன இடமெல்லாம் சுழன்று திரிந்தாள். அதன் காரணமாகப் பல இடங்களில் மயங்கி வீழ்ந்தாள். இவ்வாறு செயழிழந்து நின்ற கண்ணகி எனும் வீரபத்தினி முன் வெம்மை மிக்க நெருப்பினைப் பெறாதவளான மதுராபதி எனும் மதுரைத் தெய்வம் வந்து தோன்றியது.

**கட்டுரைக் காதை**

கண்ணகி முன் தோன்றிய மதுராபதித் தெய்வம் அவளது பண்டைய வரலாறு, கோவலன் செய்த பழைய பழியினையும் கூறுகின்றது. அதன் பின் கண்ணகியும் மதுரையை விட்டு வெளியேறித் திருச்செங்குன்றினைச் சேர்ந்து மதுராபதித் தெய்வம் கூறியபடி தன் கணவனுடன் ஒன்று கூடுகிறாள்.

**பாத்திரப்படைப்புகள்**

பாத்திரப்படைப்புகள் என்று பார்க்கும் போது சிலப்பதிகாரம் ஒரு மிகப் புகழ் பெற்ற காப்பியமாக காணப்படுகின்ற காரணத்தால் இக்காப்பியத்தின் கதாபாத்திரங்களின் முக்கியத் துவம் இக்காப்பியத்தினை மிகச் சிறப்பாக நகர்த்திச் செல்கிறது. அந்தவகையில் பாத்திரங் களாக கண்ணகி, கோவலன், மாதவி எனும் முக்கிய கதாபாத்திரங்களும், கவுந்தி அடிகள் தொடக்கம் சேரன் செங்குட்டுவன் ஈறாக பல துணைப்பாத்திரங்களும் இக்காப்பியத்தின் பாத்திரப் படைப்புகளாக அமைக்கப்பட்டு ஒவ்வொன்றும் காப்பியத்தின் கதைப் போக்கில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டுள்ளது.

**முடிவுரை**

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணியாரம் படைத்த தமிழ்நாடு என்று பாரதியாரால் போற்றப்பட்ட சிலப்பதிகாரம் ஐம்பெரும் காப்பியங்களுள் முதன்மை நூலாக தமிழில் தோன்றிய முதல் பெருங்காப்பியமாகத் திகழ்கிறது. ஏனைய காப்பியங்களிலிருந்து சிலப்பதிகாரம் ஒரு தனிச்சிறப்பு பெற்றுள்ளது. கண்ணகியின் கற்பின் பெருமையை சாலினி, கவுந்தியடிகள், கோவலன் போன்ற பாத்திரப் படைப்புகள் வாயிலாகவும் களவு, சுழ்ச்சி, பொய், நாவன்மை என்பன வினையிலேயே முடியும் என்பதனை பொற்கொல்லன் என்னும் பாத்திரப் படைப்பின் வாயிலாக காட்டும் ஆசிரியர் அதேநேரம் கண்ணகியின் நாவன்மை மூலம் ”வழக்குரை காதையில் பாண்டிய மன்னன் அவையில் அறம் நீதி என்பவற்றினை நிலைநாட்டவும் தவறவில்லை. மதுரைக் காண்டத்தின் வாயிலாக சிலப்பதிகாரத்தின் மூன்று தத்துவங்களில் ஒன்றான ”ஊழ்வினை உறுத்து வந்தூட்டும்” எனும் கோட்பாடு உணர்த்தப்பட்டுள்ளமையை கோவலன் கண்ணகி வாழ்க்கை வரலாறு மூலமும், பாண்டிய மன்னன் ஆராயாது செய்த தவறே அவனது உயிருக்குக் கூற்றாய் முடிந்தது என்பதனை அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் என்பதும் உணர்த்தப்பட்டுள்ளன. கண்ணகி தனது கற்பு நெறியில் வழுவாமல் நின்றதனால் அவளது கற்பு தீயினால் மதுரையே பற்றி எரிந்தது என்பது “உரைசால் பத்தினியை உயர்ந்தோர் ஏத்துவர்” எனும் மூன்றாவது தத்துவக் கருத்தும் மெய்பிக்கப்பட்டுள்ளமையை இம் மதுரைக்காண்டம் வாயிலாகப் பார்க்க முடிகிறது. இதனால் சேர மன்னன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் எழுப்பி கண்ணகியின் பெருமையை உலகறியச் செய்தான்.

**உசாத்துணை நூல்கள்**


- சிலப்பதிகாரம் – உ. வே சாமிநாதையர், மாணிக்க விழுமியங்கள்- நூற்றாண்டு நினைவு வெளியீடு,
- தண்டியலங்காரம்- தண்டி ஆசிரியர்